17th July 1962]

Exchanges is available for them to secure employment in posts which are notified to the Exchanges and the Exchanges can give preference to graduates if the employer desires to give such preference and the qualifications prescribed for the posts provide for it.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : வேலை இல்லாத பட்டதாரிகள் தமிழ் நாட்டில் நம்முடைய அரசாங்க எல்லையைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் ? அவர்களுக்கு வேலை தேடித் தர இந்த அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 1962 மார்ச் மாதம் 31-ம் தேதியில் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் ரிஜிஸ்தர் செய்து கொண்டவர்கள் மொத்தம் 1,59,899 பேர்கள். அவர்களில் பட்டதாரிகள் 2,970 பேர்கள். அதாவது மொத்தத்தில் 1.8 சதவிகிதம்.

திரு. சா.கணேசன் : உத்தியோகத்தையே எதிர் நோக்கி இராமல் பட்டதாரிகள் தமது உழைப்பின் மூலமாக வாழ வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் அவர்கள் ஏதாவது சிறு தொழில்கள் செய்வதற்கு தகுந்த உற்சாகம் கொடுத்தால் இந்தப் பிரச்னை ஓரளவு தீர்க்கப்படும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கு ஏதாவது வழி செய்வதற்கு முயற்சி செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயம். ஆகவே அதிலும் கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது.

திரு. கோ. வெங்கட்ராமன் : ஏற்கனவே பதவியில் இருக்கிறவர்கள்கூட வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் தங்களுடைய பெயர்களை பதிவுசெய்து கொள்ளுகிறார்கள் என்பது உண்மைதானா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி எனக்குத் தகவல் இல்லை. ஒருக்கால் உயர்ந்த பதவிக்குப் போகலாம் என்ற எண்ணத்தில் அப்படி இருக்கலாம்.

திரு. முனு ஆதி : பட்டதாரிகள் ஆசிரியர்கள் வேலையில் அமருவதற்கு தகுதி இருக்கிற காரணத்தாலும், ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதன் காரணத்தாலும் பட்டதாரிகளுக்கு எஜுகேஷன் ரூல்ஸ் எக்ஸெம்ப்ஷன் கொடுத்து அவர்கள் ஆசிரியர்களாக அமருவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்களை அப்படி வரவேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது.

* 347 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to open Youth Employment Service Units in every district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Youth Employment Service and Employment Counselling Units are already functioning at Madras, Madurai, Tiruchirappalli and Coimbatore. Similar units will be started at Vellore and Cuddalore shortly. The question of starting similar units in other districts will be considered after evaluating the work done by the six Units so far sanctioned.

திரு. வை. சங்கரன் : பொதுவாக தொழிற்சாலை இன்னும் மற்ற நிறுவனங்களில் வேலைகள் காலியாக இருந்தால் இந்த யூத் சர்வீஸ் மூலமாக தகுதியுள்ள இளைஞர்களை சிபாரிசு செய்து "பானல்" ஆக அனுப்பிவைத்தால் அவர்களில் தலைசிறந்தவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசாங்கம் விதி செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி நான் இந்தத் தகவலை மட்டும் அளிக்கலாம்.

The unit is responsible for giving guidance to young persons, especially school leavers to choose occupations and career that will suit their ability and also to advise young persons on the avenues of training suitable for their ability and aptitude so that they may equip themselves for certain occupation and careers. During the last 15 months the units have given group guidance to nearly 19,000 applicants and individual guidance to a thousand applicants.

திரு. எஸ். முருகையன் : இளைஞர்கள் என்று சொல்லும்போது எவ்வளவு வயதுக்குட்பட்டவர்கள் இளைஞர்கள் என்பதை விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது சம்பந்தமாக வெவ்வேறு விதத்தில் டெபனிஷன் இருக்கிறது. சில வயோதிகர்களைக்கூட இளைஞர்கள் என்று கருதுகிறார்கள்.

* 348 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to extend the age-limit of those who have got their names registered in the Employment Offices and who have not secured any job within the prescribed age-limits at least by five years?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI M. WILLIAM : Sir, there are many who have registered their names with the Employment Exchange within the prescribed age limits. They have to wait for two or three years and even then they do not get employment. In such cases will the Government give exemption for the period they have been waiting?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think there is any need for age exemption in this matter.

ஜப்பானியமுறை தோட்டம் (நீலகிரி மாவட்டம்)

* 349. கேள்வி.—**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உதகை பூங்காவையும், குன்னூர் சிம்ஸ் பூங்காவையும் ஜப்பான் பாலி தோட்டங்களாக அமைக்க உத்தேசமுண்டா ? எப்போது ?

(இ) இதற்கு எவ்வளவு தொகை செலவு செய்யப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir; During the current year 1962–63 and in 1963–64.

(*b*) Rupees 86,390.